# வெளிநாட்டு ஆயுதங்கள் வடபகுதி வருகிறதா?

விலை சதம் 40 ★

ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஐப்பசி 16 ஜுல்ஹஜ்: 18 இதழ் 262
யாழ்ப்பாணம் செவ்வாய்கிழமை 1-11-77

பாண், பிஸ்கற், கேக் வகைகளுக்கு
கற்பகம்
பேக் ஹவுஸ்
புகையிரத நிலையவீதி,
(சிவன்கோவிலுக்கு எதிரில்)
சுன்னம்.
விரைவில்
ஆரம்பமாகவிருக்கிறது.
7536

## 'இல்லை' என்கிறார்

### வடபிராந்திய இராணுவ கேர்ணல்

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதியில் சட்டவிரோத குடியேற்றம் குறைந்து வருவதற்குக் காரணம்; இங்கு வாழும் இந்தியத் தமிழர்கள் தாயகம், செல்வதற்கு விரும்புவதே என்று நேற்று பலாலி இராணுவ முகாமில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் வடபிராந்திய இராணுவ கேர்ணல் திரு. எம். மலகொட நிருபர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

இலங்கையின் இராணுவத் தலபதியாக பதவியேற்ற ஜெனரல் டெனிஸ் பெரேரா முதல்தடவையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வது சம்பந்தமான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக இம்மாநாடு கூட்டப்பட்டது. மாநாட்டில் பலாலி இராணுவமுகாம் பொறுப்பதிகாரி கப்டன் திரு. எஸ். ஏ. குலரத்தின, பலாலி இராணுவமுகாம் படைவீரர்கள் பொறுப்பதிகாரி கேணல் டபிள் யு.கே. நாணயக்காரா

(6 ம் பக்கம் பார்க்க



# கலைஞர் கருணாநிதி கைது

## சதி குற்றசாட்டு! 14-ம் திகதிவரை காவல்

## தமிழ்நாடு முழுவதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

சென்னை, அக. 31

நேற்று மாலை கைது செய்யப்பட்ட முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி, தி. மு. க. பொதுக்காரியதரிசி க. அன்பழகன் மற்றும் 27 முக்கிய தி. மு. க. தலைவர்கள் இன்று சென்னை மாநகர மாஜிஸ்திரேட் திரு. ஆர் குருசாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை நவம்பர் மாதம் 14ம் திகதிவரை காவலில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் இன்று உத்தரவிட்டதைத்தொடர்ந்து தி. மு. க. தலைவர் 29 பேரும் இன்று காவலில் வைக்கப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட தி. மு. க. தலைவர்கள் மீது சதிக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

### சதிக் குற்றச்சாட்டு

சதிசெய்தது, சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியது, கொலைமுயற்சி மேற்கொண்டது, பயமுறுத்தியது, அரசாங்க ஊழியர்கள் கடமையில் ஈடுபடுவதைத் தடைசெய்தது ஆகிய குற்றச்சாட்டுக்கள் தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி மீதும், மற்றையோர் மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

நேற்று மாலை கைதுசெய்யப்பட்ட தமிழ்நாடு சட்டசபை எதிர்க்கட்சித் தலைவரும், தி மு க தலைவருமான திரு. மு. கருணாநிதி, மற்றும் தி மு க முக்கிய பிரமுகர்கள் 28 பேரும் இன்று பகல் சென்னை மெ[illegible] மாஜிஸ்திரேட் திரு. ஆர். குருசாமி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். இதனைத்தொடர்ந்து இவர்களை அடுத்த மாதம் 14ம் திகதிவரை காவலில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

### மணியம்மை கைது

கைதுசெய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டவர்களில் முன்னாள் அமைச்சர் சாதிக் பாட்ஷா, ஆசைத்தம்பி, ஆற்காடு வீராசாமி ஆகியோரும் அடங்குவர்.

தி. மு, க, தலைவர்கள் தவிர, திராவிடக்கழகத் தலைவர்களும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தலைவர்களும்கூட கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

திராவிடகழக தலைவி திருமதி மணியம்மை, பொதுச் செயலாளர் வீரமணி உள்ளிட்டு 19 பேர் அடுத்தமாதம் 13ம் திகதிவரை காவலில் வைக்கப்பட்டனர். மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 151பேர் கைதுசெய்யப்பட்டு அடுத்த மாதம் 15ம் திகதிவரை காவலில்வைக்கப்பட்டனர்.

தடைஉத்தரவை மீறியதாக இவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதனிடையே, தி. மு. க. தலைவர் கலைஞர் மு கருணாநிதி கைது செய்யப்பட்ட செய்தி நேற்று காட்டுத்தீபோல தமிழகம் முழுவதும் பரவிற்று. நேற்றும் இன்று பகல்வரையும் கலைஞர் மு. கருணாநிதி கைதுசெய்யப்பட்டதாக [illegible] லும், செய்தி காட்டுத்தீ வெள்ளமாக பாய்ந்ததைத் தொடர்ந்து இன்று திங்கட்கிழமை, தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் கலைஞரும் மற்றும் தி. மு. க. தலைவர்களும் கைது செய்யப்பட்டதற்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இதன் எதிரொலியாக, உடுமலைப்பேட்டையில் 7,000க்கும் அதிகமானவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதில் அனைத்திந்திய அ. தி. மு. கழகத்தைச் சேந்த 27 பேர் காயமடைந்தனர். தி. மு. கழகத்தைச் சேர்ந்த 27பேர் கைதுசெய்யப்பட்டனர். கன்யாகுமரிமாவட்டத்தில் 55 பேரும், காஞ்சிபுரத்தில் 63 பேரும், சேலத்தில் 110 பேரும், பரமக்குடியில் 13பேரும் இன்று கைது செய்யப்பட்டனர். சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டங்களில் போக்குவரத்துகள் முற்றுக இன்று ஸ்தம்பிதம் அடைந்தன.

நேற்று சென்னையில் காலமான இருவரினதுகுடும்பத்துக்கும் தமிழக முதலமைச்சர் நிவாரணநிதியிலிருந்து தலா 5000ரூபா உதவிப்பணம்வழங்கப்படுமென்று இன்று அறிவிக்கப்பட்டது.

பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியான இரண்டுபேரில் ஒருவர் மட்டுமே இன்று அடையாளம் காணப்பட்டார்.

இன்று மாலை தமிழ்நாடு தலைமைச்செயலாளர் திரு.கே. கார்த்திகேயன் 'தமிழக நிலைமை' பற்றித் தெரிவிக்கையில், தமிழ்நாட்டின் பலபகுதிகளிலும் தலைதூக்கிய வன்செயல்கள் முடிவுற்று, யாமூல் நிலை[illegible] தமிழகம் திரும்பி [illegible]

[illegible] செய்தி[illegible] [illegible]நாகாந்தி இன்[illegible]

சென்னையிலிருந்து புதுடில்லிக்குப் பயணமானார். அவரை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. கருப்பையா மூப்பனாரும் மற்றைய முக்கிய காங்கிரஸ் பிரமுகர்களும் வழியனுப்பி வைத்தனர்.

நேற்றைய வன்முறைச்சம்பவத்தில் [illegible] கேரள [illegible] சென்னையிலிருந்து திருவனந்த[illegible] பயணமானார்.

---

இ. போ. ச.

## டிக்கட் மெஷின் மோசடி அம்பலம்

கொழும்பு, திங்கள்

இ. போ. சபை டிக்கட் மெஷின் மோசடியொன்று இன்று கண்டுபிடிக்கப்பட்டது.

அனுராதபுரத்திலிருந்து கொழும்புநோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ், இடையில் நிறுத்தப்பட்டதாம். அப்போது, பஸ்கண்டக்டர் தமது டிக்கட் மெஷினை அங்கிருந்த ஒரு கடையிலிருந்த ஒருவரின் கைமாற்றிய போது, பஸ்ஸிலிருந்த டிக்கட் பரிசோதகர்கள் மோசடியைக் கண்டுபிடித்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

டிக்கட் மெஷினின் இலக்கங்கள் மாற்றப்பட்டபோது மோசடி கண்டுபிடிக்கப்பட்டு, சாரதி, கண்டக்டர் மற்றும் கடைச்சிப்பந்தி ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர் இந்தமோசடியை நடத்தியதன் மூலம் 110 ரூபா 'சம்பாதி'க்கப்பட்டதாம்.

இலக்கங்கள் மாற்றும் கருவிகள் கைப்பற்றப்பட்டதுடன் சாரதி, கண்டக்டர், கடைச்சிப்பந்தி ஆகியோர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்

---

## தந்தை கைது

மட்டுவில், திங்கள்

மீசாலை தெற்கில் தமது 5வயது பிள்ளையை குளத்திற்கு பலியாக்கிய சந்தேகநபரான நா. சண்முகநாதனை கிளிநொச்சியில்வைத்து நேற்று பொலிஸார் கைதுசெய்தனர். (க)

......

## பஸ் திருட்டு

கொழும்பு, திங்கள்

இ. போ. ச. பஸ் ஒன்று திருட்டுப் போய்விட்டதாகப் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

பிட்டிகலை பொலிஸ் பகுதியில் இத்திருட்டு நள்ளிரவில் நடைபெற்றதாம். (உ)

---

## கடும் போர்

லண்டன், அக் 31

ரொடீஷியா- ஸாம்பியா எல்லையில் கடும்போர் மூண்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இச்சண்டையில் 26பேர் கொல்லப்பட்டனர். [உ]

---

தேசிய பேரவை இன்று கூடுகிறது

# 17 சட்டமூலங்கள் நிறைவேற்றப்படும்

கொழும்பு, திங்கள்

தேசியப்பேரவை இன்று கூடும்பொழுது நீதிமந்திரி திரு. கே டபிள்யு தேவநாயகத்தால் கொண்டுவரப்பட்ட சிவில் சட்டக் கோவைகள் (சிலதிருத்தங்களுடன்) உட்பட 17 சட்ட மூலங்கள் தேசியப்பேரவையில் நிறைவேற்றப்படும்.

வரலாற்றில் முதல் தடவையாக இன்று ஆகக்கூடிய சட்ட மூலங்கள் பேரவையில் அங்கீகாரம் பெறுவதால், பேரவை நள்ளிரவுவரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நீதியமைச்சினால் கொண்டுவரப்படும் சட்டமூலத்தினால் முன்னைய அரசினால் கிரிமினல், சிவில், பெனல் சட்டக்கோவைகள் தனித்தனியாக பிரிக்கப்படும். சிவில் நீதிமன்ற சட்டக்கோவை மீண்டும் அறிமுகப்படுத்தப்படும். பிரிந்திருக்கும் கணவன் மனைவிக்கு விவாகரத்து வழங்கப்படும். மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் சிவில் வழக்குகள் அகற்றப்பட்டு கிரிமினல் வழக்கு மட்டும் விசாரிக்கப்படும். கிராம நீதிமன்றங்கள் தரம் உயர்த்தப்படும். ஆகியவை முக்கியமானதாகும். (செ)

---

## 'அமிரு'க்கு கார் கிடைத்தது

கொழும்பு, திங்கள்

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு உத்தியோக பூர்வமான கார் வழங்கப்பட்டுள்ளது.

160 'பி' ரகமான டற்சன் மஞ்சள் நிறக்கார் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வமான அலுவலகத்தில், திரு அ. அமிர்தலிங்கத்தை 'டெயிலி டெலிகிராப்' பத்திரிகைநிருபர் திரு. ஹிஸ்ட் இன்று பேட்டி கண்டார்.

---

## ரூ. 70,000 கொள்ளை!

கொழும்பு, திங்

குளியாப்பிட்டி தொகுதியில் உள்ள ஒரு வங்கி இன்றுகாலை 11 மணிக்கு துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டது.

கொழும்பு ஹோட்டல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் வெள்ளை நிறக்காரில் வந்த 4 இளைஞர்கள், துப்பாக்கி முனையில் இந்த வங்கியில் 30,000 ரூபா ரொக்கப் பணத்தையும், 40,000 ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

இன்று மாலைவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## வரிவிளம்பரம்

### வகுப்புகள்

ஓமான், டுபாய், அரேபியா, அமெரிக்கா ஆகிய வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் வெல்டிங் பயிற்சி அளிக்கப்படும். தொடர்புகொள்ளவும்: என். ஞானசேகரம், இல. 148/A ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 7546

### தேவை

வெதுபவர்கள், உதவியாளர்கள், குமிளர்கள் அப்பிறன்டிஸ் ஆகிய தொழிலுக்கு ஆண்கள், பெண்கள் தேவை. நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கவும். உலாஸ் கிளாஸ் தொழிற்சாலை, சுன்னுகம். 7550

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## ஓசிப் பயணிகள் பிடிபட்டனர்

மல்வான, திங்.

இ. போ. ச. பஸ் ஒன்றில் கூட்டுறவு உதவி அமைச்சர் திரு. எஸ். இராஜகுரு, நடத்திய திடீர் பரிசோதனையில் 30 ஓசிப் பிரயாணிகள் சிக்கிக் கொண்டனர்.

இளன்டிவல இ. போ. ச. டிபபோவைச் சேர்ந்த திடீர் பரிசோதனைக் குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்ற உதவி அமைச்சர் பஸ்ஸில் நேரடியாக பரிசோதனை நடத்தினர்.

டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்த 30 பிரயாணிகளும் உடனடியாக அபராதம் செலுத்தினர்கள்.

பிரயாணிகள், அப்பகுதியில் சேவைக்கு போதிய பஸ்கள் இல்லை எனப் புகார் செய்து வந்தனர். ஆனால் இ. போ. சவினர் அப்பகுதி சேவையினால் லாபமில்லையென்று கூறி வந்தனர்.

இதில் உள்ள மர்மத்தை நேரில் அறிந்து கொள்வதற்காகவே உதவி அமைச்சர் திடீர் பரிசோதனையை நடத்தினர். (க)

புராதன

# இலங்கை - கிரேக்கதொடர்பு மேலும் ஆராய்ச்சி வேண்டும்

## கிரேக்க ஆராய்ச்சியாளர் கோரிக்கை

கொழும்பு, திங்கள்

இலங்கையில் நடைபெற்ற கிரேக்கக் குடியேற்றங்கள், இலங்கைக்கும் கிரேக்கத்துக்கும் இடையில் இருந்துவந்த வர்த்தகத் தொடர்புகள் பற்றி இலங்கையில் மேலும் ஆராய்ச்சிகள் நடத்தப்படவேண்டும் என்று தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் கோரியுள்ளார்.

கிரேக்கநாட்டைச் சேர்ந்த டாக்டர் எலிபி சணுத் என்ற இந்தப் பெண் நிபுணர் டண்டைய மட்பாண்டங்கள் குறித்து இருநாட்டினையும் சேர்ந்த கல்வி மான்களுக்கு விசேட பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்றும் இருநாடுகளுக்கும் இடையில் நேரடி கலாச்சாரத் தொடர்புகள் இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஏனைய நாடுகளில் உள்ள பௌத்த மதங்களிலும்பார்க்க இலங்கையில் பௌத்தக் கலைகள் தனித்துவம் கொண்டதாக மிளிர்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

## கால்நடைப் பண்ணைக்கு உதவி

கொழும்பு, திங்

கால்நடைப் பண்ணைகளை ஆரம்பிக்க விரும்புவோர்களுக்கு சகல உதவிகளையும்வழங்குமாறு காணி, விவசாய அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா கால்நடை அபிவிருத்திச் சபைக்குப் பணித்துள்ளார்.

இதேவேளை கால்நடை அபிவிருத்திச்சபை கால்நடை அபிவிருத்தியின்பொருட்டு பல மூலப்பொருட்களைப் பாவிக்கவுள்ளது.

நோய்த் தடுப்புக்குரிய வழிமுறைகளையும் சபை ஆராயும். (உ)

## கடற்றொழில் விருத்திக்கு விசேடவங்கி நிறுவப்படும்

கொழும்பு, திங்

கடற்றொழில் அபிவிருத்தியின் பொருட்டு விசேட வங்கி ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

இத்தகவலை கடற்றொழில் அமைச்சர் திரு பேட்டஸ் பெரேரா காலித்துறைமுகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் வெளியிட்டார்.

கடற்றொழிலை நாட்டின் அபிவிருத்திக்கான மிகமுக்கிய தொழில்களில் ஒன்றாக்கி கடற்றொழிலாளருக்கு உதவும் வகையில் இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் சொன்னர்.

துறைமுகங்களில் உள்ள ஊழல்கள், சீர்கேடுகள் நீக்கப்படும் என்று சொன்ன அமைச்சர் துறைமுகங்கள் நிறுவப்படும்போது கடற்றொழிலாளரின் ஆலோசனைகளும் பெறப்படும் என்றும் கூறினர்.

## நெல்லியடிப் பட்டினசபை

# கேள்வி அறிவித்தல் — 1978

1. 1-1-1978 தொடக்கம் 31-12-1978-ந் திகதி வரையுள்ள காலத்திற்கு கீழ்க்காணப்படும் குத்தகைகளுக்கும் சேவைகளுக்கும் 1977 நவம்பர் மாதம் 18-ந் திகதி முற்பகல் 10-30 மணி வரையும் விசேட ஆணையாளரால் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) **சந்தைகள்**

1. கொட்டடிச் சந்தை
2. கோவில் சந்தை

(ஆ) **இறைச்சிக்கடைகள்**

1. மத்திய சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல. 1
2. ,, ,, ,, இல. 2
3. ,, ,, ,, இல. 3
4. ,, ,, மாட்டிறைச்சிக்கடை இல. 4
5. ,, ,, ,, இல. 5
6. ,, ,, ,, இல. 6

(இ) குப்பை அகற்றுவதற்கான ட்ருக்டர் சேவை

(ஈ) குப்பை அகற்றுவதற்கான இரட்டை மாட்டுவண்டிச் சேவை.

2. கேள்விப்பத்திரங்கள் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை இக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். பிணைப்பணமும் கேள்விப்பத்திர நிர்ணய விலைகளும் கீழ் குறிப்பிடப்பட்டபடி செலுத்திக் கேள்விப்பத்திரங்களைப் பெறுதல் வேண்டும்.

| | பிணைப் பணம் ரூபா சதம் | கேள்விப் பத்திர நிர்ணய விலை ரூபா சதம் |
|---|---|---|
| 1. கொட்டடி சந்தை | 100 - 00 | 10 - 00 |
| கோவிற் சந்தை | 100 - 00 | 10 - 00 |
| 2. நெல்லியடி மத்திய சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல 1, 2, 3 ஒவ்வொன்றுக்கும் | 500 - 00 | 25 - 00 |
| 3. நெல்லியடி மத்தியசந்தை மாட்டிறைச்சிக் கடை இல. 4, 5, 6 ஒவ்வொன்றுக்கும் | 500 - 00 | 25 - 00 |
| 4. ட்ருக்டர் சேவை | 100 - 00 | 10 - 00 |
| 5. இரட்டை மாட்டு வண்டிச் சேவை | 100 - 00 | 10 - 00 |

3. பூரணப்படுத்தப்பட்டு அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதஉறைகளில் உள்ளடக்கப்பட்டவையாகவும் கடிதஉறைகளின் இடது பக்கமேல்மூலையில்சமர்ப்பணம் செய்யப்படும் குத்தகையின் பெயர் குறிப்பிடப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் சபை அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியிலிடுதல் வேண்டும் அல்லது பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

4. எந்த ஒரு கேள்வியையும் முற்றுகவோ பகுதியாகவோ ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ பட்டினசபை விசேட ஆணையாளருக்கு பூரண உரிமையுண்டு.

5. இதுவிடயமாக வேறு தகவல்களைப் பெற விரும்புவோர் அவற்றை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

பி. எம். யோசப்,
விசேட ஆணையாளர்,
நெல்லியடிப் பட்டினசபை.

பட்டினசபை அலுவலகம்,
நெல்லியடி, கரவெட்டி,
28-10-1977.

7549

அச்சுவேலி

## குடும்பத் திட்ட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செவ்.

இலங்கை குடும்பத்திட்டச் சங்க இளைஞர் குடிசனவியல் குழு, அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் இளைஞர் கருத்தரங்கொன்றை நடாத்தியது.

அச்சுவேலி கிராமசபைப் பகுதி குடும்பத்திட்ட அதிகாரி திரு. பாலகிருஷ்ணர் தலைமையில் ஏற்றமிகு உலகை நோக்கி இளைஞர்களின் பங்கு' என்னும் விஷயம்பற்றி கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பங்குபற்றியவர்களுக்கு, சான்றிதழ்களும், எழுது உபகரணங்களும் வழங்கப்பட்டன. அச்சுவேலி வடக்கு ச.ச நிலையம் உட்பட இப்பகுதியிலுள்ள சகல நிலைய உறுப்பினர்களும் பங்குபற்றினர்.

திரு. நேசமாணிக்கம் புஷ்பநாயகம், திரு. கலா. பரமேஸ்வரன், டாக்டர் பீ சிறி பிரியதர்சன், திருமதி யோகாபாலச்சந்திரன், திரு. வி.கந்தையா உட்பட பலர் கலந்துரையாற்றினர். (ஈ)

## சம்பத்திரிசியார் வென்றது

அரியாலை, திங்கள்

யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரிக்கும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 2-ம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் 4-3 கோல்களால் சம்பத்திரிசியார் கல்லூரிக் கோஷ்டி வெற்றியீட்டியது.

## பரி.யோவான் வெற்றி

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்குமிடையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் பிரிவுப் போட்டியில் 2-0 கோல்களாலும் 2-ம் பிரிவுப் போட்டியில் 4-1 கோல்களாலும் பரி. யோவான் கல்லூரி கோஷ்டிகள் வெற்றி பெற்றன. மூன்றும் பிரிவுப் போட்டியில் இருகோஷ்டிகளும் தலா ஒரு கோலை அடித்துச் சமமாக்கிக் கொண்டன.

வவனியா, கிளிநொச்சியில்

# 250 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன

யாழ்ப்பாணம், செவ்.

பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுச்சபை, இதுவரை 250 குடும்பங்களை குடியேற்றியுள்ளது.

பூதான இயக்கமூலம் வவனியா, கிளிநொச்சிப் பகுதிகளில் கிடைத்த காணிகளிலேயே இவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், பல்வேறுவித செலவினங்களுக்காக 3000 ரூபா வரை செலவிடப்பட்டுள்ளது.

அகதிகள் குடும்பத்திற்கு காணி வழங்குவதுடன், வீடு கட்டிக்கொடுப்பதற்கான ஏற்பாட்டையும் சபைசெய்துள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் முதல் மூன்று மாதத்திற்குரிய செலவை சபையே பொறுப்பேற்கும். புனர்வாழ்வுச் சபைக்கு இதுவரை இரண்டு லட்சம் ரூபா வரை சேர்ந்துள்ளது.

இதேசமயம், தென்பகுதியிலிருந்து மூடப்படும் அகதிகள் முகாமிலிருந்து பல குடும்பங்கள் கிளிநொச்சிக்கு வந்து கொண்டிருக்கின்றன. முகாம்கள் மூடப்படுவதைத்தொடர்ந்து இக்குடும்பங்களுக்கு சமூக சேவை இலாகா 350 ரூபா வழங்கியதாகவும், தாங்கள் வாழ்ந்த இடத்திற்குச்செல்லப் பயந்து இங்குவந்ததாகவும் அகதி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் திஸமாரகமவிலிருந்து சுமார் 300 அகதிகள் ரயிலில் கிளிநொச்சிக்கு வந்துள்ளனர். (அ)

## இலங்கைக்கு ஆயுதங்கள் கடத்தப்படுகிறதா?

கொழும்பு, திங்.

இலங்கைக்கு வெளிநாட்டிலிருந்து ஆயுதங்கள் கடத்தப்படுகிறதா, என்பது பற்றி உயர் மட்ட விசாரணை நடைபெற்று வருகிறது.

அண்மையில் வத்தளைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கடத்தல் பொருட்களில் எட்டு வெளிநாட்டு 'ரைபிள்'துப்பாக்கிகள், காணப்பட்டதை தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சு பூரணவிசாரணையொன்றை மேற்கொண்டுள்ளது

சந்தேகத்திற்கிடமான முறையில் இலங்கைக்கரையில் காணப்படும் கப்பல்களை சோதனையிடுமாறு கடற்படை ரோந்துப் பிரிவினருக்கு பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே பணித்துள்ளது. கரையோரப் பொலிஸ் நிலையங்களையும் உஷார் நிலையில் இருக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## மாவையில் இன்று

யாழ்ப்பாணம், செவ்வாய்

மாவிட்டபுரம் பட்டிக்கடவை ஞான வைரவர் ஆலய சங்காபிஷேகமும் அன்னதானமும் இன்று பகல் நடைபெறவிருக்கின்றன. (உ)

## பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், செவ்

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. வ. க. ஈசுரபாதத்திற்கு மேற்படி வட்டார அதிகாரிகள், ஆசிரியர்கள் பிரிவுபசார விழா வொன்றை நடத்தவிருக்கிறார்கள்.

நாளை மாலை 3-30 மணியளவில் அச்சுவேலிபுனித தெரேசா மகளிர் வித்தியாலய உப அதிபர் திரு. எஸ். துரைசிங்கம் தலைமையில் இவ் விழா நடைபெறும். (கா)

## கறுப்புக்கொடி, சிறைவாசம் இவைகளுக்கு

# அஞ்சுபவள் நான் அல்ல!

## சென்னையில் இந்திரா சூளுரை

சென்னை, அக். 31

''நான் மக்களைத் தூண்டி விடுகிறேன் என்று கூறப்படுவது விஷமத்தனமானது. அதில் உண்மையில்லை. மக்களின் குரலையே நான் எதிரொலிக்கிறேன். வன்முறையைத் தூண்டும் எண்ணம் எனக்கில்லை. காந்திஜியின் அஹிம்சைக் கொள்கையையே நான் பின்பற்றுகிறேன்.''

இவ்வாறு திருமதி இந்திரா காந்தி நேற்றிரவு சென்னை மெரினா கடற்கரையில் சீரணி அரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் ''மக்கள் மனதில் வன்முறைச் சிந்தையே எழக்கூடாது'' என்ரூர்.

### அஞ்சுபவளா நான்?

தி. மு. க. மார்க்ஸிஸ்ட், தி. க. வினர் தமக்குக் கறுப்புக்கொடி எதிர்ப்புத் தெரிவித்ததுபற்றி திருமதி காந்தி குறிப்பிடுகையில் ''கறுப்புக்கொடிகளுக்கோ, சிறைச்சாலைக்குச் செல்லவோ அஞ்சுபவள் நான் அல்ல. எனது கருத்துக்களைச் சொல்லவிடாது தடுப்பது எல்லாம் ஜனநாயக வழியாகுமா? என்ரூர்.

### ஒன்றுபட்ட இந்தியாவே லட்சியம்

''வறுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றை ஒழித்து நாடு பொருளாதார சுதந்திரம் பெறுவதே காங்கிரஸின் கொள்கையாகும் ஏழைகள், இளைஞர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்காவிட்டால் நாட்டுப் பிரச்சினை என்றும் தீராது. மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமிடையே நல்லுறவு இருக்க வேண்டியது அவசியம். ஆனல் மத்திய அரசே பலவீனப்பட்டுவிட்டால் மாநில அரசு எப்படி வலுவானதாக இருக்கமுடியும் ஒன்றுபட்ட இந்தியாவே எமது இலட்சியம்,

ஜனதா அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றகாலத்தில் இருந்து உருப்படியாக எதையும் செய்யாமல் சில்லறைப் பிரச்னைகளில் கவனம் செலுத்தி மக்களைத் திசைதிருப்பப் பார்க்கிறது.

மக்கள் இன்றுதான் தாம் எந்தத் திசையில் செல்வது என்று தெரியாது தவிக்கும் நிலை உருவாகியுள்ளது'' என்ரூர்.

தமிழ்நாட்டு மக்களின் பணி பாராட்டுக்குரியது. தமிழ் மொழியின் சிறப்பு தனித்துவமானது என்றும் திருமதி காந்தி சொன்ஞர்.

இது இவ்வாறு இருக்க தமிழ்நாட்டில் திருமதி காந்திக்கு காட்டப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கை குறித்து கர்நாடக மாநில முதல்வர் திரு. தேவராஜ் அர்ஸ் வருத்தம்தெரிவித்துள்ளார். (உ)

## 'மாணவர் நல்வாழ்வுக்கு ஆசிரியர் உழைக்கவேண்டும்'

### தமிழக முதல்வர் அறிவுரை

சென்னை, அக். 31

''தமிழ்நாடு, தனது எந்த உரிமையையும் இழக்காது. காவிரிநீர்பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணும்'' என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறியுள்ளார்.

கும்பகோணத்திற்கு அருகே உள்ள வலங்கைமானில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே திரு. எம். ஜி. ஆர். மேற்கண்டவாறு சொன்ஞர்.

''கேரள நீரை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய இடங்களுக்கும் கொண்டுவர முயற்சி எடுக்கப்படும்'' என்றும் திரு. எம். ஜி. ஆர். மேலும் சொன்ஞர்.

### ஆசிரியர்களுக்கு எம். ஜி. ஆர். அறிவுரை

இங்கு நடைபெற்ற பட்டதாரி ஆசிரியர் சங்க 4வது ஆண்டுக் கூட்டத்தில் முதல்வர் பேசுகையில், ''மாணவர்களிடையே ஒழுங்கு முறையை வலியுறுத்திக் கலாசாரத் துறையில் அவர்களை வளர்க்க வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும்'' என்று வலியுறுத்தினர்.

''மாணவர்களின் நல்வாழ்வுக்காக ஆசிரியர்கள் அரும்பாடுபடவேண்டும். விளையாட்டுத்துறையிலும் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (உ)

## கலைஞரின் காருண்யம்

சென்னை, அக். 31

தமிழ்நாட்டில் ஏற்பட்ட கோர வெள்ளத்தால் தன் மூக்குக் கண்ணுடியை இழந்துவிட்ட வயோதிப மாது ஒருவரின் துயரநிலை கண்டு மனமுருகிய தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணநிதி தம் சொந்தச் செலவில் அவருக்கு மூக்குக் கண்ணுடி ஒன்றினை அன்பளிப்புச்செய்தார்.

கலைஞரைக் கண்டதும் பவானியம்மா என்ற பிரஸ்தாப மூதாட்டி ''தம்பீ! உன்னுடைய ஆட்சியில் எனக்கு வழங்கப்பட்ட மூக்குக்கண்ணுடி வெள்ளத்தால் உடைந்துவிட்டது. வேறு ஒரு கண்ணுடி வாங்கக் காசு இல்லை'' என்றி கூறி அழுதார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, கிண்டி காந்தி மண்டபம், பொறியியல் கல்லூரி ஆகியவற்றில் தஞ்சம் புகுந்திருக்கும் சுமார் 5000 அகதிகளைக் கலைஞர் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினர். (கி-உ)

### இந்திரா எதிர்ப்பு நடவடிக்கை எதிரொலி

## தி. மு. க. தலைவர்கள் கைதானதை கண்டித்து கடையடைப்பு - ஊர்வலம்

### தமிழ்நாட்டில் பதட்ட நிலைமை

சென்னை, அக். 31

திருமதி இந்திராகாந்திக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் போது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து தமிழ்நாட்டின் பலபாகங்களிலும் கண்டன ஊர்வலங்கள் கடையடைப்புகள், கல்லெறிச் சம்பவங்கள் என்பன நடைபெற்றுள்ளன.

கல்லெறிச் சம்பவங்களில் இரு பொலிசாரும் காயமடைந்தனர்.

தஞ்சாவூரில் கண்டன ஊர்வலத்தைக் கலைக்க பொலிஸார் தடியடி கண்ணீர்ப்புகைப் பிரயோகம் நடத்தினர்.

கும்பகோணத்திலும் கண்டன ஊர்வலத்தினர்மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்யப்பட்டது.

திருச்சியில் ரயில் தடுத்து நிறுத்தப்பட்டது.

கோயம்புத்தூர் உட்படப் பல இடங்களில் தி. மு. க. தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து கடையடைப்பு நடைபெற்றது.

ஆட்டோ ரிக்ஷாக்களும் இங்கு ஓடவில்லை.

சேலத்திலும் கண்டன ஊர்வலம் நடந்தது.

மதுரையில் 73 பேர் மேலும் கைதாகினர். இவர்கள் தி. மு. க., தி. க ஆதரவாளர்களாவர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 100 பேர் காயமடைந்தனர். 13 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு தி. மு. க., ஆதரவாளர்கள் 300 பேர் கைதாகினர். மதுராந்தகத்தி தி. க. வும் ஆர்ப்பாட்டம் நடந்தது. (உ)

### அணு உற்பத்தியா? கவனம்!

# தென் ஆபிரிக்காவுக்கு யு. எஸ். எச்சரிக்கை



நியுயோர்க், அக். 31

தென்னுபிரிக்க அரசின் சமீபகாலப் போக்கு அமெரிக்காவின் கோபத்தைக் கிளறிவிட்டிருக்கிறது.

அணு ஆயுத உற்பத்தியில் தென்னுபிரிக்கா தீவிரம் காட்டி வருவதாக வெளிவந்துள்ள செய்தி அமெரிக்காவின் கவலையை அதிகரித்துள்ளது.

அண்டையிலுள்ள கறுப்பர் நாடுகளுக்கும் தென்னுபிரிக்காவுக்குமிடையில் நடைபெற்று வரும் போராட்டங்களில் கறுப்பர் நாடுகளுக்கு ஆதரவு வழங்குவது பற்றி அமெரிக்கா இப்பொழுது ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

இது குறித்து ஐ. நா. வில் அமெரிக்கப் பிரதிநிதி திரு. யங் பேசியிருக்கிறுர்.

அணு ஆயுத உற்பத்தியில் தென்னுபிரிக்கா தீவிரம் காட்டினுல் மொசாம்பிக், அங்கோலா ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா ஆயுத உதவி வழங்கத் தயங்காதென்று ஐ. நா. விலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி திரு. அன்ரூ யங் கூறியிருக்கிறுர். (உ)

# இந்தியாவில் வெளிநாடுகள் தொழில்புரிய தயக்கமாம்

சென்னை, அக். 31

ஜனதா கட்சித் தலைவர்களின் பேச்சுக்கள், நடவடிக்கைகள் காரணமாக இந்தியாவுடன் தொழில் உறவு ஒப்பந்தங்கள் செய்துகொள்ள பல வெளி நாடுகள் தயங்குவதாக சென்னையிலிருந்து வெளிவரும் 'தென்னகம்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. இப்பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது:-

'ஜனதா அரசு தாக்குப்பிடிக்காதது என்பதற்காக, காங்கிரஸ் கட்சியை இழிவுபடுத்துவதற்காக, பல வெளிநாட்டு நிறுவனங்களில் இந்திரா அரசு லஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டுவதே இதற்கு முக்கிய காரணமாகும் என்று வலியுறுத்தியுள்ளன.

'இதனுல் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த தொழில் முன்னேற்றம், ஜனதா ஆட்சியில் மோசமடைந்துவருகின்றதாம்.

'அமெரிக்காவில் உள்ள நிறுவனத்திடம் 'போயிங்' விமானம் கொள்முதல் செய்ததில் ராஜீவ் காந்தி லஞ்சம் வாங்கிஞர் என்று ஜனதா கட்சி குற்றம் சாட்டிவருவதை கம்பெனியாளர்கள் மறுத்துள்ளனராம்.'

பம்பாய் கடலில் எண்ணெய் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக பிரெஞ்சு நிறுவனத்திடம் பெருந்தொகையாகப் பணம் பெற்றதாக இந்திராமீது குற்றஞ்சாட்டி வருகின்றனர். இக்குற்றச்சாட்டு திட்டமிடப்பட்டு வஞ்சம் தீர்க்கப்படுவதற்காக நடைபெறும் பிரசாரமென மத்திய எண்ணெய்வள அமைச்சர் திரு. கே டி. மாளவியாவை பிரெஞ்சுத் தூதுவர் சந்தித்து கண்டனம் தெரிவித்துள்ளாராம்.

'மத்திய தொழில் அமைச்சர் திரு. பெர்னுண்டஸ் லிபியா சென்ற சமயம், இந்தியாவில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்பவில்லையென லிபிய அரசு தெரிவித்ததாம். அதேபோல் மற்ருெரு அரபு நாடும் மறுப்புத் தெரிவித்துள்ளதாம். இதனுல் அமைச்சருக்கு பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாம்' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கெ)

## புதுவித பணயக் கைதிகள்!

ஒட்டாவா, அக். 31

கிராமிய வங்கி ஒன்றில் கொள்ளைக்காரன் ஒருவன் 25 பேரை பணயமாக வைத்துள்ளான் என அறிவிக்கப்படுகிறது.

மருந்துக் கடை ஒன்றில் கொள்ளையடித்த சமயம் பொலிசார் இவனை விரட்டி வந்ததாகவும், அவ்வேளை குறிப்பிட்ட கிராமிய வங்கிக்குள் பாய்ந்த பிரஸ்தாப கொள்ளையன் அங்கிருந்த 25 பேரை பணயமாக வைத்துள்ளான்என்றும்கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் இருந்து வெளிவந்த செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

## புதிய விசேட ஆணையாளர்

வவனியா, திங்

வவனியா நகரசபையின் புதிய விசேட ஆணையாளராக திரு ஐ.எம்.விஜேஎனிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. விஜேஜனிஸ் கடந்த ஐந்து வருடங்களாக வவனியா நகரசபையின் காரியதரிசியாகக் கடமையாற்றினுர்.

## விசேட தகவல் நிலையம்: அ. சே. நாடுகள் கோரிக்கை

பெல்கிரேட், அக். 31

அணிசேரா நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்கும் வானெலி தொலைக்காட்சியைப் பொறுத்தவரை விசேட தகவல் நிலையங்கள் நிறுவப்பட வேண்டியது அவசியமாகும் என்று அணிசேரா நாடுகளின் மாநாடு ஒன்றில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த நான்கு நாள் மாநாடு யூகோஸ்லேவியாவில் உள்ள சரஜோவியாவில் நேற்றுடன் முடிவடைந்தது.

ஒலிபரப்புத் துறையில் பரஸ்பர ஒத்துழைப்பும் கோரப்பட்டது. (உ)

# வடக்கில் ஜனநாயக எழுச்சி இடதுசாரி பிரமுகர் விளக்கம்

## தமிழர் நிலைபற்றி தெற்கில் விளக்க கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், செவ்,

''தென்னிலங்கையில் உள்ள விவசாய, தொழிலாளர்படித்த வேலையற்ற வாலிபர்கள் மத்தியில் தமிழ்மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளை முன்வைக்க கருத்தரங்குகள், சந்திப்புகள் நடைபெறுவதற்கு இங்கிருந்து தமிழர் விடுதலை கூட்டணி தலைவர்கள் உட்பட வடபகுதியில் எழுச்சிபெற்றுள்ள ஜனநாயக இயக்கத்தின் உண்மையான பிரதிநிதிகள் சிங்கள மக்கள் முன் அறிமுகம் செய்துவைக்கப்பட வேண்டும்.''

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக வளாகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற கருத்தரங்கில் ''சமீபத்திய நெருக்கடியும் தீர்வும்'' என்னும் தலைப்பில் உரையாற்றிய கலாநிதி எஸ்.விக்கிரமபாகு கூறினார். இக்கருத்தரங்கு கலாநிதி இந்திரபாலா தலைமையில் நடைபெற்றது

கம்யூனிஸ்ட்கட்சி பிரமுகர் திரு வி. பொன்னம்பலமும் கருத்தரங்கில் சமூகமளித்திருந்தார்.

### வித்தியாசம் உண்டு

கலாநிதி விக்கிரமபாகு தமது உரையில் கூறியதாவது: 1958ம் ஆண்டில் நடைபெற்ற கலவரத்திற்கும் 1977 ம் ஆண்டில் நடைபெற்ற கலவரத்திற்கும் வேறுபாடு உண்டு 1958ல் நடந்த கலவரத்தில் நடைபெற்றதிலும் பார்க்க 1977ல் உயிர்ச்சேதங்கள் உடைமைச், சேதங்கள் அதிகமானவை.

அன்றைய கலவரத்தை கே. எம் பி. ராஜரத்ன மெத்தானந்தா முதலானோர் முன்னின்று நடத்தித் தம்மை வெளிப்படுத்திக் கொண்டார்கள் கலவரத்திற்கு அவர்களே தலைமையும் தாங்கினர்.

இன்று நடந்த கலவரத்தில் எந்த அரசியல் கட்சியோ பிரமுகரோ வெளிப்படையாக பங்குகொள்ளாதது குறிப்பிடத்தக்கது.

அன்று கலவரம் முன்னின்று ஊக்குவிக்கப்பட்டது. ஆனல் இன்று நடந்த கலவரத்தில் வெளிப்படையாக எவரும் காணப்படவில்லை.

### 1977ல் தொழிலாளரும் ஈடுபட்டனர்

1977 ல்நிகழ்ந்த கலவரத்தில் தொழிலாளர்கள் பங்குபற்றியுள்ளனர்.

இத்தொழிலாளர்கள் தமக்கு உயர் பதவியில் இருந்த பொறியியலாளர்கள், டாக்டர்கள், புகையிரத நிலைய அதிபர்கள் முதலானோரைத் தாக்கி வருந்தத்தக்க விதத்தில் நடந்து கொண்டுள்ளனர்.

1958 ல் இவ்விதம் தொழிலாளர்கள் நடந்து கொள்ளாதது கவனத்திற்குரியது

### மலையகத்தில்

மலைநாட்டைப் பொறுத்தவரையில் கிராமப் புறங்களில் (நாட்டில்) உள்ள சிங்களத் தொழிலாளர்கள் தமக்கு உத்தியோகம் கிடைக்க வேண்டும் என்றநோக்கத்துடன் மலையகத்தில் தமிழ் தொழிலாளர்களை துன்புறுத்தியுள்ளனர்.

துன்புறுத்தப்படும் தொழிலாளர்களின் வேலைகளைத் தாம் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைத்து இவர்கள் இவ்விதம் நடந்துகொண்டுள்ளார்கள்.

### இதற்குக் காரணம்

வேலையில்லாத் திண்டாட்டமும், பொருளாதாரப் பிரச்னையுமே இதற்குக்காரணமாகும்.

பொருட்கள் சூறையாடலுக்கு வறுமை காரணமாகவிருந்தது.

பொருட்களைச் சூறையாடி பகிர்ந்து கொள்ளலாம் என்று கொள்ளைகள் நடந்தன.

அப்பட்டமான உண்மைஇது

### சிங்கள நடுத்தர மக்கள் நிலை

இவ்விதம் நடந்த வன்முறைகளையிட்டு சிங்கள இனத்தில் உள்ள நடுத்தரமக்கள் மனம் வெதும்பி, வெட்கமுற்றுஒதுங்கிய இருந்தனர். இவ்வித வன்முறைகளை இவர்கள்விரும்பியவர்கள் அல்லர்.

அரசாங்கத்தின் விசித்திரமானதும் செயலற்றதன்மையுமானதுமான போக்கும் கலவரம் வலுத்ததற்குக் காரணமாகும்.

அரசாங்கம் இந்தநேரத்தில் செயலற்றுத் தயங்கி நின்றது. இந்நிலை கலவரத்திற்குப் பயன்பட்டுவிட்டது.

### வடக்கில் ஜனநாயக எழுச்சிஇயக்கம்

கலவரவேளை வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் ஜனநாயக விடுதலை இயக்கம் எழுச்சி பெற்று நின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையின் பின் முழுமக்களும் திரண்டுள்ளனர். நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து போராடுவதே குறிப்பிட்ட ஜனநாயக எழுச்சி இயக்கத்தின் போராட்ட அம்சமாக இருந்தது.

### சிங்களவர்கள் எதிரல்ல

எந்த அரசாங்கம் வந்தாலும் தமது கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி இந்த இயக்கம் தம் எதிர்ப்பைக் காட்ட முற்படுமேயன்றி சிங்களமக்களுக்கு எதிராக அமைந்தது அல்ல இவர்களது போராட்டத்திட்டம்.

வடக்கைப் பொறுத்தவரை இனம் தன்னுணர்வு பெற்றுவிட்டது.

இனம் தம்பிரதேசங்களையும் மொழியையும் தனித்துவம் வழுவாது பேணும் வகையில் செயற்படும் இந்த ஜனநாயக எழுச்சியை அங்கிகரிக்கத்தவறினல் அல்லது நியாயம் வழங்கத் தாமதம் ஏற்பட்டால் சிக்கல்களும் சிரமங்களுமே பெருகும்.

இந்த இயக்கத்தின் சில கோரிக்கைகளைக் கைவிடச் செய்வதன் பொருட்டு அரசு தாமாக நேரடியாகப் பங்குபற்றுது தயங்கி நின்றதுடன் வேண்டாத பேச்சுகளின் மூலம் இனத்துவேஷத்தை தென்னிலங்கையில் உக்கிரமமையச் செய்துவிட்டது.

### தீர்வு என்ன?

இப்பிரச்னைகளுக்கு நிரந்தரத்தீர்வு காண்பது எங்கனம் எனஆராயப் புகுவோம் பல புதிய சக்திகள் தமிழ்மக்களிடம் ஒன்றிணைந்துள்ளன.

படித்தும் வேலையற்ற தமிழ் வாலிபர்கள் விவசாயிகள் சிறுதொழில் செய்யும் வர்த்தகர்கள் இந்த ஜனநாயக எழுச்சியின் பின்னணியில் தென்படுகிருர்கள்.

இந்த உணர்வையும் நியாபூர்வமான கோரிகைகளையும் ஏற்று ஒரு தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்.

இதனையொட்டி தெற்கில் கருத்தரங்குகள் சந்திப்புகள் நடைபெறவேண்டும்.

போராட்டத்தின் பின்னணியில் உள்ள நியாயபூர்வமான கோரிக்கைகளை சிங்கள மக்களும் ஏற்கச் செய்யும் வகையில் இயங்குவது தெற்கில் உள்ள முற்போக்குச் சக்திகளின் பிரதான கடமையாகும்.

இந்த வகையில் உதவ நாம் முன்வருகிரும்.

### தமிழர் பிரதேசங்களை அவர்களே ஆளவேண்டும்

தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களை அவர்களே ஆளவேண்டும். பேச்சுவார்த்தை என்பது சுயநிர்ணய உரிமை பற்றியதாகவே இருக்கமுடியும்.

தமிழினம் தேசிய இனம் என்பதை அங்கீகரித்து சுயநிர்ணய உரிமையை ஏற்கும் எவருடனும் என்ன வழியில் ஆட்சி அமைப்பை உருவாக்கலாம் என்ற உடன்பாடு ஏற்படுத்தப்படலாம்.

அது பிரதேச சுயாட்சியாக இருந்தால் என்ன சுதந்திரமான குடியரசுகளின் இணைப்பாட்சியாக அமைந்தால் என்ன? அதைத் தீர்மானிக்கும் பொறுப்பும் அதிகாரமும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு சுயநிர்ணயஉரிமை அடிப்படையிலேயே அமையவேண்டும்

சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கும் நிலைமையில் தமிழினம் சுதந்திரமாக எடுக்கும் முடிவின் அடிப்படையில் இணைந்து வாழ எடுக்கும் தீர்மானமே நியாயபூர்வமானது.

தமிழர் தம் பிரதேசங்களை ஆளும் உரிமையை இழந்த நிலையில் வேறு எந்த உரிமை அடிப்படையிலும் பேச்சுவார்த்தை அமைவது சாத்தியமானதல்ல.

### த. வி. கூட்டணி

இந்நிலையில் முன்னெடுக்கச் செய்யும் பொறுப்பு த. வி. கூட்டணிக்கு எதிரானதாக அமையமுடியாது.

அவர்களது ஜனநாயகக் கோரிக்கைகளை ஏற்று, மதித்து செயற்படக்கூடிய சக்தியாகவே உண்மை இடதுசாரி இயக்கத்தினர் செயற்பட முடியும்.

### வி. பி. யின் உதவி

வடக்கில் லங்கா சமசமாஜிகளும், கம்யூனிஸ்ட்டுகளும் ஏனைய ஜனநாயக சக்திகளுடன் இணைந்து இத்தகைய நிலைப்பாட்டினைக் கொள்ளும் முயற்சி அவசியமானது.

இந்த வகையில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் வி. பொன்னம்பலம் போன்றவர்களை சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்குச் சக்திகள் தேசியமட்டத்தில் நாட்டின் பல பாகங்களிலும் நடத்தவிருக்கும் கருத்தரங்குகள், கூட்டங்களில் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

இந்தவகையில் தோழர் வி. பி. இன்று தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைபற்றி கொண்டுள்ள நிலைப்பாடு பெரிதும் எமக்கு உதவும்.'' (உ)

---

''பாண்டித்தியம் பெற்ற

# நம் முன்னேரை நாமே மறப்பதா?''

மாவிட்டபுரம், திங்கள்

''நமது மூதாதையரிற் பலர் அறிஞர்களாகவும், புலவர்களாகவும், கலாவிற்பன்னர்களாகவும் இருந்திருக்கிருர்கள். அவர்களை நாம் நினைவு கூருவது காலகதியில் அருகிப் போய்விடுகிறது. அவர்களுக்கு, அவர்கள் பிறந்த கிராமங்களிலேயே நினைவுகூரத்தக்க விதத்தில் நினைவுச் சின்னங்கள் நிறுவினுல் எதிர்காலச் சந்ததியினரும் அவர்களை நினைவு கூர வாய்ப்பாக இருக்கும். ஆதலால் கட்டுவன் கிராமத்திலே பிறந்து, வளர்ந்த பழம் பெரும் புலவர் விஸ்வநாதரின் பெயரில் இங்கு ஒரு சனசமூக நிலையத்தை நிறுவுவதில் நாம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேம்.''

கட்டுவன் மத்தி 'விஸ்வநாதப் புலவர்' சனசமூகநிலைய அங்குராற்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பண்டிதர் செ. நடராசா குறிப்பிட்டார்.

திரு. ஆ. முத்துக்குமாரு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நடராசா மேலும் பேசுகையில் ''விஸ்வநாதப் புலவரின் கோலாட்டப் பாட்டு, இப்பகுதி ஆலயங்களில் மட்டுமல்ல, இலங்கை இந்திய வானொலிகளில் இசையுடன் ஒலிபரப்பப்பட்டுவருகிறது'' என்றும் குறிப்பிட்டார்.

''கட்டுவன் மேற்கு 18ம் வட்டாரத்தினூடாகச் செல்லும் பிரதான பாதையான ஐயனர் கோயில் ஒழுங்கை மிகவும் சீர்கேடாக இருப்பதால் வாகனப் போக்குவரத்துக்கள் செய்யமுடியாமல் இப்பகுதி மக்கள் கஷ்டமுறுகின்றனர். மழை காலங்களில் இவ்வொழுங்கை சேறும்சகதியுமாகக் காணப்படுவதால் நோயாளிகளைக்கூடத் தோளில் சுமந்தே வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவேண்டியிருக்கிறது. இவ்வொழுங்கையைச் சீர்திருத்தி அமைக்குமாறு காங்கேசன்துறை எம். பி. திரு அ.அமிர்தலிங்கத்திற்கும், மயிலிட்டி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் மகஜர் அனுப்புவதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: ஆ. முத்துக்குமாரு, உப-தலைவர்: சி. சிவஞானம், காரியதரிசி: த. சண்முகநாதன், உப காரியதரிசி: ஆ கந்தையா பொருளாளர்; எஸ். சுப்பிரமணியம், இயக்குநர்களாக 9 பேரும் ஆலோசனைக் குழுவில் மூவரும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஈ)

---

### விசாரணை நடுவில் எதிரி விடுதலை

நீர்கொழும்பு, திங்

இளம் பெண்ணை பலாத்காரம் செய்ததாகக்குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் சாட்சி முரண்பாட்டினல் விசாரணை நடுவில் எதிரிவிடுதலை செய்யப்பட்டார்

இவ்வழக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஏச் ஏ. டி ஜீ சில்வா முன்னிலையில் நடைபெற்றது.

போலகலவில் என். கே. லீலாவதியை பலாத்காரம் செய்ததாக, பி. அமரதாசா என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசாரியில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) ஆஜரானர். அரச தரப்பில்சட்டத்தரணி ரஞ்சித் பெரேரா ஆஜரானர். (ச)

---

இந்தியாவில்

## பஞ்சாப் மாநிலத்தில் மது அருந்துபவர் அதிகம்

### பிரதமர் தேசாய் தகவல்

புதுடில்லி, அக். 31

''பாரதத்தில் மிகக் கூடுதலான மதுவைப் பருகுபவர்கள் பஞ்சாப் மாநிலத்திலேயே இருக்கிருர்கள். இம்மாநிலத்தில் முற்றுக மது ஒழிப்பு நடைபெற்ருல் ஏனைய மாநிலங்களில் மது ஒழிப்பைத் தீவிரமாக அமுல்படுத்துவது கஷ்டமாயிராது.''

இவ்வாறு பாரதப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் கூறியுள்ளார்.

மதுவால் விளையும் ஆபத்தை உணர்ந்து மதுவிலக்கு அமுலுக்கு நாட்டு மக்கள் அனைவரும் பூரணமாக உதவவேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

---

ம. கி. விவகாரம் :

# ஜெனீவாமாநாடுஇவ்வருடம் நடைபெறும் சாத்தியமில்லை

## அமெரிக்கா கருத்து

வாஷிங்டன், அக். 31

மத்தியகிழக்குப் பிரச்னை தொடர்பான ஜெனீவா சமாதான மாநாடு இவ்வாண்டு இறுதிக்குள் நடக்கும் சாத்தியக்கூறுகள் இல்லையென்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டரின் தேசிய பாதுகாப்புச் சபை ஆலோசகர் மேலும் கூறுகையில், ஜெனிவா மாநாட்டுப் பேச்சுவார்த்தைகள் 1978 ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்தில்தான் நடைபெற வாய்ப்பு உண்டு என்ருர்.

அரபு தூதுக்குழுவில் பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வதை இஸ்ரேல் ஏற்குமா என்பது பற்றி பதில்கூற அவர் மறுத்தவிட்டார்.

தென்னுபிரிக்காவுக்கான ஆயுத விற்பனை நிறுத்தம் கொள்கையளவில் ஆரம்பித்துவிட்டதாகக் கூறிய அவர் தென்னுபிரிக்காவை சரியான பாதையில் தூண்டும்பொருட்டே இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ருர். இனப் பூசல்களாலும் கருத்துவேறுபாடுகளாலும் பிரச்னைகளைத் தீர்க்கும் சுமுகநிலை ஏற்படாதென்றும் அவர் சொன்னர். (உ)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
சிவாஜி-தேவிகா
அன்புக்கரங்கள்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-45
முத்துராமன் - தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only
NIGHT OF THE BIG HEAT
(Color)

சாந்தி
யாழ். நகர்
போன்: 7642
அனேக இரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
31-10-77 முதல் 03-11-77 வரை
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஃ திலிப்குமார் ஃ மதுபாலா ஃ பிருத்விரதிர்ஜ்கபூர் ஃ அஜீத்
அக்பர் (தமிழ்) - புதிய பிரதி நடனங்கள் கலரில்

தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30, 6-30, 9-45
மனோஹரா (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ் அறிமுகம் பவானி நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ காலை 9-30 மணிக்கு காட்சி ஆரம்பமாகும். காட்சிகள் தொடர்ந்து காண்பிக்கப்படும்.
(யாழ். நகர்) போன்: 7693
எம். ஜி. ஆர். — லதா நடித்த
நீதிக்கு தலைவணங்கு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
அன்னக்கிளி

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

படவிமர்சனம்:

## 'தசாவதாரம்'

கருத்தாழம் மிக்க வசனங்கள், வலுவான புராணக் கதை. சிந்தையை விட்டகலாது செவிகளுக்கும் இன்ப விருந்தளிக்கும் மதுர கீதங்கள் முதலான பல சிறப்பம்சங்கள் கொண்ட படம்தான் பி. வி. கி. தயாரிப்பான 'தசாவதாரம்'.

புராணக் கதைகளில் இடம் பெறும் அறிவுரைகள் புராணத்திரைப்படங்களில் தெளிவாக வெளிப்படுத்தாத குறை இத்திரைப்படத்தில் இல்லை.

ஸ்ரீ கண்ணபிரானின் பத்து அவதாரங்களை சிறிய முறையில் இத்திரைப்படத்தில் தயாரிப்பாளர்கள் சித்தரித்துள்ளனர்.

தமிழ்த் திரையுலகின் பண்பட்ட நடிகர்களில் ஒருவரான எஸ் வி. சகஸ்ரநாமம் உட்பட ஜெமினி கணேஷன், நடிகவேள் எம் ஆர். ராதா, கே ஆர். விஜயா உட்பட நடிப்பாழம் மிக்க நடிக, நடிகையர் பலர் இத்திரைப்படத்திற்கு தமது அற்புத நடிப்பால் மேலும் சிறப்பூட்டுகின்றனர்.

சீர்காழி கோவிந்தராஜன் நாரதர் வேஷமேற்று கருத்தில் நிறைகிறார்.

மேற்படி பத்து அவதாரங்களும் மிகத் தத்ரூபமாக அற்புதமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இயக்குநர் திலகம் கே. எஸ். ஜி டைரக்ஷன் என்றால் கேட்கவா வேண்டும்.

சில கட்டங்களில் ரசிகர்கள் தம்மையறியாமலேசிந்தை நெகிழ்ந்து விழிநீர் சொரியும் நிலையினையும் திரைப்படமாளிகையில் காணக் கூடியதாக இருக்கிறது கன்னிமாடத்தில் நின்ற சீதாதேவியை ஸ்ரீ இராமர், கண்ணுற்றதும் 'அண்ணலும் நோக்கினான்' என்ற கட்டம் இத்திரைப்படத்தின் உச்சக்கட்டமாக அமைகிறது.

கருத்துச் செறிவுள்ள கண்கவர் ஈஸ்ட்மென் கலர் கொண்ட - இரசிகர்களின் நெஞ்சை விட்டகலாத விதத்தில் இத்திரைப்படத்தை அளித்த திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு நன்றி சொல்ல வேண்டியது மிக அவசியமானது.

சகல சிறப்பம்சங்களும் கொண்ட இத்திரைப்படம் ஜனத்திரள் நிறைந்த காட்சிகளுடன் யாழ். ராஜா வெண்திரையில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் இந்த அற்புதப்படைப்பை நிச்சயம் பார்த்தாக வேண்டும், அல்லது அரியதொரு சந்தர்ப்பத்தை இழந்தவர்களவோம்.

(சிலோன் சந்திரன்)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

RIO (Jaffna)
Live and Times of
HITLER
Please note change in show times 10-30, 4-30, 7-00, 9-30.

# 100,000 பேருக்கு புதிதாக வேலைவாய்ப்பு

கொழும்பு, திங்கள்

100,000 பேருக்குப் புதிதாக வேலைவாய்ப்பு அளிக்கும் விதத்தில், நாடுமுழுவதும் வர்த்தக நிலையங்கள் இரவு 10 மணி வரை திறந்து வைப்பதற்கான ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது.

பொதுமக்களுக்கு தங்கள் வர்த்தக தேவைகளைப் பூர்த்தி செய்ய இது உதவக்கூடியதாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

தொழில் அமைச்சர் காப்டன் சி. பி. ஜே. செனிவரத்ன இதை நடைமுறைப்படுத்துவதற்கான அவசிய திருத்தங்களை தேசிய அரசுப்பேரவையில் விரைவில் தாக்கல் செய்வார்.

இப்புதிய திட்டத்தின்மூலம், நாடுமுழுவதும் உள்ள வர்த்தக நிலையங்களில், ஊழியர்கள், இருபகுதியாக வேலைக்கு அமர்த்தப்படுவார்கள். இதன் மூலம் புதிதாக 100,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கலாம் எனத்தொழில் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது வர்த்தக நிலையங்கள் மாலை 6 மணிக்கு மூடப்படுவதால், அரசாங்க ஊழியர்களும், தனிப்பட்டஸ்தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்களும், வர்த்தக தேவைகளை பூர்த்திசெய்யநேரமின்றி கஷ்டப்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

தற்போது வர்த்தக நிலையங்களில், பணியாற்றும் ஊழியர்கள் நீண்டநேரம் வேலைசெய்வதாகவும் இப்புதியதிட்டம் மூலம் இந்தக்கஷ்டமும் நீங்குமென்றும், அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்:

# 'பட்ஜட்'டில் நிதி ஒதுக்கப்படும்!

கொழும்பு, திங்கள்

நீண்டகாலமாகத் தேர்தல் நடைபெறுமலிருக்கும் 722 உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான நிதி வசதி புதிய வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் படவிருக்கிறது.

இத்தேர்தல்கள் அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெற விருக்கிறது.

தேர்தல் முறையில் பல மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், நேரடியாக மக்களாலேயே தெரிவுசெய்யப்படுவார்கள்.

இவ்வருடமே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடாத்த அரசு முன்னர் முடிவுசெய்திருந்தது. ஆனால் புதிய தேர்தல் சட்டம், தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்க காலதாமதமாகியதைத்தொடர்ந்து இத்தேர்தல்கள் அடுத்த வருடத்திற்குபின்போடப்பட்டுள்ளன.

12 மாநகர சபைகளுக்கும் 38 நகரசபைகளுக்கும், 83 பட்டினசபைகளுக்கும், 589 கிராம சபைகளுக்கும் அடுத்தவருடம் தேர்தல் நடைபெறும். புதிதாக 8,415 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். (ஏ)

## மூதாட்டியிடம் கைவரிசை

நெல்லியடி, திங்கள்

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த இ.போ.ச பஸ்ஸில் வைத்து மூதாட்டி ஒருவரின் 70 ரூபா பணம் கையாடப்பட்டது.

கொட்டப் பெட்டியில் இப் பணத்தை இவர் வைத்திருந்தாராம். (உ)

## பௌத்த நாட்டில் மதுபானம் எதற்கு?

பாணந்துறை, திங்கள்

இது ஒரு பௌத்த நாடு. கடந்த அரசாங்கம் இது ஒரு பௌத்த நாடு என்பதை மறந்து நாடு முழுவதும் மதுபானநிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கியது.

மினுவன்பிட்டியாவில் நடந்த கூட்டமொன்றில் பேசிய நிதி அமைச்சர் திரு. ரொனி டிமெல் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ரொனி டிமெல் மேலும் கூறியதாவது:

மதுபான நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கியதன் மூலம் மக்களை மதுப்பிரியர்களாக்குவதற்கு ஊக்கமளித்தது.

கடந்த அரசு ம்மதுபான நிலையங்களை பாடசாலைகள், வழிபடும் ஸ்தாபனங்களுக்கு சமீபத்திலும் திறக்க அனுமதி வழங்கியது. இதனால் இந்த அரசு 326 மதுபான நிலையங்களில் 76 நிலையங்களை மூடுவதற்கு உத்தரவிட்டுள்ளது. இதன்மூலம் மக்களை மது அரக்களிடமிருந்து பாதுகாப்போம். (க)

## இவர்களுக்கு வேலை வழங்கக் கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

கடந்த அரசாங்க காலத்தில் வேலைநீக்கம் செய்யப்பட்ட 1400 கூட்டுறவு ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கவேண்டும் என அகில இலங்கை கூட்டுறவு ஊழியர் சங்கம் கோரியுள்ளது.

கடந்த காலத்தில் அரசியல் பழிவாங்கப்பட்ட சகல கூட்டுறவு ஊழியர்களுக்கும் வேலை வழங்கவேண்டும் என சங்கச் செயலாளர் திரு. விரசேன விஜயசுந்தரா கூட்டுறவு அமைச்சரிடம் கோரியுள்ளார்.

அரசியல் காரணமாக கடந்த அரசு காலத்தில் 800 கூட்டுறவு ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அரசியல் செல்வாக்கினால் நியமனம் பெற்ற நெறியாளர் குழுவின் தாளத்திற்கு இவர்கள் நடனமாட மறுத்த. காரணத்தினாலேயே வேலைநீக்கம் செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இவ்விஷயமாக சங்க தூதுக்கோஷ்டியொன்று கூட்டுறவு உதவி அமைச்சர் திரு. சரத் ராஜகருணைவை சந்திக்கவிருக்கிறது. (க)

## எங்கே போனார் இவர்?

பேலியகொடை, திங்.

மனச்சஞ்சலம் கொண்டு காணப்பட்டவர் எனக் கூறப்படும் திலகரத்ன என்னும் நபர் காணமல் போய்விட்டார் என பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சம்பவதினம் இவர் சைக்கிளில் புறப்பட்டாராம். இவர் ஒரு ரயில்வே தொழிலாளி எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

நான்காவது வெற்றி வாரம்!
ராஜா - யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் அற்புத படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா
எம். ஆர். ராதா, கே. ஆர். விஜயா நடித்த

தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)

**மணிவாக்கு**

'சமநோக்கு இனிமையைத் தருகிறது'— இதன் உண்மையை ஒவ்வொரு கணமும் அனுபவத்திற் காண்கிறோம்.

— காந்திமான்'


# ஈழநாடு
## The Eelanaadu


### ஆர்ப்பாட்டம்!

தமிழ் நாட்டில் இந்திரா எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அநியாயமாக இரு உயிர்களைப் பலிகொண்டு பலரைக் காயப்படுத்தியுமிருக்கும் செய்தி இந்திய மக்களுக்குமட்டுமல்ல அமைதியை விரும்பும் எவருக்குமே மகிழ்ச்சியளிக்கமுடியாது.

தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திராவை எதிர்த்து கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்வதற்கு திராவிட முன்னேற்றக்கழகம், திராவிடக் கழகம், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை தீர்மானித்திருந்தன.

திருமதி இந்திராகாந்தி இந்தியாவின் பிரதமராக இருந்தகாலத்தில்தான் தமிழ்நாட்டில் ஆட்சிபீடத்தில் இருந்த கலைஞர் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவைமீது ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி ஆட்சியைக் கலைத்து ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனம் செய்து கலைஞரையும் மற்றும் அமைச்சர்களையும் நீதிமன்றத்துக்கும் விசாரணைக் கமிஷன் முன்னும் இழுத்து தமிழ் நாட்டில் தி. மு. கழகத்துக்கே இழுக்குத்தேட முயற்சி செய்யப்பட்டது.

இத்தனைக்கும் பொறுப்பாக இருந்த திருமதி இந்திராகாந்தி இப்போது பதவியில் இல்லாதபோதிலும் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்யும்போது எதிர்ப்புக் காட்டவேண்டுமென்று தி. மு. கழகமும் அதனை ஆதரிப்பவர்களும் தீர்மானித்ததில் யாரும் குறைகாணமுடியாது.

நாட்டுக்காகத் தங்கள் குடும்பத்தையே அர்ப்பணித்த நேரு பரம்பரையில் வந்த திருமதிஇந்திரா, தமது ஆட்சிக்காலத்தில் யாருடைய புத்திமதிகளைக் கேட்டோ. தவறுகள் இழைத்தாரென்பதை உலகமே இப்போது அறிந்துகொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் தி. மு. கழக ஆட்சிமீது ஊழல்குற்றம் சாட்டிய திருமதி இந்திரா மீதும் அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்கள் பலர்மீதும் இப்போது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

இந்த நிலைமையிலும் கூட திருமதி இந்திராவின் தமிழ் நாட்டு விஜயத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வதற்குத் தீர்மானித்ததில் தவறுசொல்லமுடியாது.

கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்வது ஜனநாயக நாட்டில் நடைமுறையிலுள்ள ஒரு நிகழ்ச்சி.

ஆனால் தமிழ் நாட்டில் திருமதி இந்திராவுக்கு எதிராக நடந்த கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செருப்பு. கல்வீச்சு போன்ற வன்முறைச் செயல்களுக்கு வழிவகுத்து இரு உயிர்களை அநியாயமாகப் பலிகொண்டது தமிழ்நாட்டின் பண்புக்கும் பெருமைக்கும் நிச்சயம் மதிப்பளிக்கமுடியாது.

இந்த வன்முறைச் செயல்களை தமிழ்நாடு முதல்அமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கண்டித்திருக்கிறார்; கவலையும் தெரிவித்திருக்கிறார்.

இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் எங்கே தொடங்கி எங்கே போய் முடியுமென்பதை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அறிந்து அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவேண்டுமென்பதையும் சொல்லத்தான் வேண்டும்.

பரபரப்பான சூழ்நிலையில்

# இன்று வட இலங்கை
## சுதேச வைத்தியசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வட இலங்கைச் சுதேச வைத்திய சபைக் கமிட்டிக் கூட்டம், பரபரப்பான சூழ்நிலையில் இன்று பிற்பகல் 2-30 மணிக்குக் கூடுகிறது.

யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேதக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்திற்குச் சபைத் தலைவர் திரு கு. வினோதன் தலைமை தாங்குவார்.

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தடை உத்தரவு ரத்துச்செய்யப்பட்டபின் முதல் தடவையாக இக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கல்லூரியின் எதிர்காலம் பற்றியும், முதல் வருட மாணவர்களை அனுமதிப்பது பற்றியும் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

**பொலிஸ் எச்சரிக்கை**

மூடப்பட்டிருந்த லங்கா ஆயுர்வேதக் கல்லூரியின் முன் கதவுப் பூட்டை உடைத்துச் சில மாணவரும் வேறு சிலரும் சென்றதாகச் செய்யப்பட்ட புகார் பற்றி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் விசாரணை நடைபெற்றது.

இவ்விசாரணையில் கல்லூரி இயக்குநர்சபைத் தலைவர் திரு. கு. வினோதன், செயலாளர்: டாக்டர் ஏ. நடராசா, கல்லூரிக் காவலாளி உட்படப் பலர் சாட்சியமளித்தனர்.

பொலிசார் சம்பந்தப்பட்டவர்களை எச்சரிக்கை செய்தனர். (க)

# "அரசுவழங்கும் சலுகைகள் எம்மை திருப்திபடுத்தாது"
— அமிர்தலிங்கம்

பண்டத்தரிப்பு, திங்கள்

"இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் சகல உரிமைகளும் பெற்ற இனமாக சுயமரியாதையுடன் வாழ்வதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணியின் அடிப்படை இலட்சியத்தை அடைவதே ஒரே வழியாகும். இதைத்தவிர அரசாங்கம் வழங்கும் எந்தவிதமான சலுகைகளும் எம்மைத் திருப்திப்படுத்த முடியாது."

காங்கேசன்துறை எம். பியும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசார விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அரங்கில் சங்கத்தலைவர் டாக்டர் பாக்கியநாதர் அத்தனாசியார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"சமீபத்தில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு எமது மத்தியில் அகதிகளாக வந்திருக்கும் எமது உடன்பிறப்புகளுக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டியது எமது முக்கிய கடமையாக இன்று இருக்கிறது இவர்களுக்கு அரசாங்கம் அனுதாபத்தோடு ஆதரவளிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்க முடியாது பாதிக்கப்பட்ட தமிழ் அரசு ஊழியர்கள், வர்த்தகர்கள் என்போரின் நலன்களையும் நாங்கள் அக்கறையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் கவனிக்க வேண்டியிருக்கிறது எமது இனத்திற்கு ஏற்பட்ட இன்னல்களையும் சோதனைகளையும் திடமனதுடன் ஏற்று எமது இலட்சியத்தை அடைவதில் உறுதியாக இருப்போம்"

கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு வி பொன்னம்பலம் கூறியதாவது:

"பாடசாலைகளில் மும்மொழித் திட்டத்தை அமுலாக்குவதன் மூலம் மொழியறிவை மட்டும் ஏற்படுத்தலாமே ஒழிய தேசிய ஐக்கியத்தையும், இனஒற்றுமையையும் நிலைநாட்ட முடியாது

"ஒரு இனத்தை சிதைத்து அழிப்பதன் மூலம் தேசிய ஒற்றுமையை நாட்டில் ஏற்படுத்த முடியாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும் நாட்டிலுள்ள மொழிகளை சமத்துவம் பெற்ற தேசிய மொழியாக அங்கீகரித்து அரசியல் சாசனத்தில். இடம் பெறச்செய்யவேண்டும்."

சங்கத் தலைவர் டாக்டர் பாக்கியநாதர் அத்தனாசியார், கல்லூரி அதிபர் வண. அன்ரன் இராசநாயகம், ஆசிரியர்கள் எஸ். இராசநாயகம், எம். யோசவ் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்கள். (க)

## வெளிநாட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் கலந்துகொண்டனர்.

கேர்ணல் எம். மலஹொட மற்றொரு கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில், வடபகுதியில் கள்ளக் கடத்தலை முற்றாக முறியடிப்பதற்கு விமானப் படை, இராணுவம், கடற்படை கூட்டாக நடவடிக்கை எடுத்துவருகின்றது என்றும் இதனால் அண்மைக்காலங்களில் கள்ளக்கடத்தல் முயற்சிகள் நடைபெறவில்லை என்றும் கூறினார்.

யாழ்ப்பாணத்தில்இராணுவ முகாம் அவசியமா என்று நிருபர்ஒருவர் கேட்டதற்கு யாழ்ப்பாணத்தில் பதட்ட நிலைமை இருப்பதால் அவசியம்' என்றார்.

சிங்கள மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கும் இராணுவ முகாமை வேறொரு இடத்தில் அமைப்பதற்காக பண்ணை அநாதைகள் இல்லத்தை எடுப்பதற்கு அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

'சிங்கள மாணவர்களின் கல்வி வீணாவதால் விரைவில் இம்முகாம் மாற்றப்படும். பலாலி இராணுவமுகாம் பல மைல் தூரத்தில் இருப்பதால் உடனடியாக பிரச்னைகள் ஏற்படும்போது தொடர்பு கொள்ள யாழ்ப்பாணத்தில் முகாம் இருப்பது அவசியம்' என்றும் அவர் தெரிவித்தார். கடந்தகாலங்களைப் போலல்லாமல் இனிமேல் இராணுவத்தினர் சுமுகமாக நடந்துகொள்வார்கள் என்றும் கூறினார்.

வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்கள் வடபகுதிக்கு கடத்தப்படுகின்றனவா எனக் கேட்கப்பட்டபோது, அப்படிஇதுவரை நடைபெறவில்லையென்றார்.

நாளை வரவிருக்கும் புதிய இராணுவதளபதி ஜெனரல் டெனிஸ் பெரேரா காலை 9மணிக்கு விமானப்படைவிமானத்தில் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

உத்தியோக பூர்வமாக விஜயம் செய்யும் தளபதி நாளைய தினமே கொழும்பு திரும்புவார். [கெ]

### மரண நன்றி நவிலல்

எனது காலஞ்சென்ற மனைவியார் திருமதி பாக்கியம் அவர்களின் ஈமச்சடங்கில் பங்கு பற்றிய உறவினர், நண்பர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

சி. பொ. வேலாயுதபிள்ளையும் பிள்ளைகளும்

'அருணகிரி', செம்பியன் ஒழுங்கை,

கொக்குவில். 7555

## மரண அறிவித்தல்

### S. N. கோபாலகிருஷ்ணன்

யாழ்ப்பாணம் 65, சினிவாசகம் வீதி, கொட்டடியைச் சேர்ந்தவரும், ஸ்ரீதர் சினிமா பங்காளரும், யாழ். மோட்டர்ஸ் (Jaffna Mortors) உரிமையாளருமான எஸ். என். கோபாலகிருஷ்ணன் காலமாகிவிட்டார். இவர் கமலாட்சியின் அன்புக்கணவரும், ரவி, ரவீசன், ரஞ்சி, ரஞ்சன், அம்பிகா, ராஜகுமார், ரமேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (1-11-77) மாலை 4-00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும். 7554

## நாடும் நடப்பும்

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள அகதிகள் முகாம்களுக்குச் சில அன்பர்கள் சென்றிருந்தார்கள். அங்குள்ள பரிதாப நிலைமையைப் பார்த்த அவர்கள் இன்னும் சில தினங்களில் ஏதாவது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்துடன் திரும்பியிருக்கின்றனர்.

இந்த அன்பர்களில் ஒருவர் வட்டக்கச்சியில் உள்ள அகதிகள் முகாம்பற்றிச் சொன்ன கதையைக் கேட்டதும் 'யாரை நோவேன், யார்க்கெடுத்துரைப்பேன்' என்ற வரிகளே நினைவுக்கு வந்தன.

வட்டக்கச்சி அகதிகள் முகாமிலுள்ளவர்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர். ஒரு குடும்பம் முருங்கை இலையையே அவித்து உணவாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்ததாம்.

இந்த முகாமிலுள்ளவர்களுக்கு எந்தவகையில் உதவி செய்ய முடியுமோ அத்தனை முயற்சிகளிலும் இரண்டு கன்னியாஸ்திரிகளும், வணபிதா மைக்கேலும் ஈடுபட்டுள்ளனராம்.

இந்த முகாமிலுள்ள அகதிகளில் கர்ப்பிணிகள் சிலரும் உள்ளனராம். இந்த முகாமுக்குச் சிறிது தூரத்தில் ஒரு குளம் இருப்பதாகவும் அந்தக் குளத்து நீரையே குளிப்பதற்கும் துவைப்பதற்கும் குடிப்பதற்கும் கூட உபயோகிக்க வேண்டிய நிலை உள்ளதாம்.

இதே சமயம் இந்த முகாமுக்கு அருகேயுள்ள பிள்ளையார் கோயிலில் உள்ள கிணற்று நீரைக் குடிப்பதற்குக்கூட அந்தக் கோயில் குருக்கள் அனுமதிக்கிறாரில்லையாம்!

கன்னியாஸ்திரிகளும் பாதிரியாரும் அகதிகளுக்குக் கருணை காட்டுகிறார்கள். பிள்ளையார் கோயில் குருக்கள் அகதிகளுக்குக் குடிப்பதற்குக்கூடத் தண்ணீர் கொடுக்க மறுக்கிறாரே என்று கண்ணீர் விடுகிறார் அந்த அன்பர்!

சைவத்தைக் காப்பாற்றுவதற்கென்றே அவதரித்துள்ளதாகக் கூறிக்கொள்ளும் சித்தாந்தச் சரபங்களும் சைவசபைகளும் இந்த அகதிகள் விஷயத்தில் கவனம் செலுத்தினாலென்ன?

ஃ ஃ ஃ

1970-ம் ஆண்டிலிருந்து தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லையென்றும் விஞ்ஞான ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட தமிழ்ஆசிரியர்களையே தமிழையும் படிப்பிக்கும்படி பணிக்கப்பட்டுள்ளதாகவும் விஞ்ஞானஆசிரியர்கள் தமிழை இலக்கணச் சுத்தமாகப் படிப்பிக்கமுடியுமா என்றும் ஓரன்பர் கேட்கிறார்.

தமிழ்மொழியைப் படிப்பிப்பதற்குத் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டியதுதானே முறை!

கல்வியில் சீர்திருத்தம்செய்யவிருக்கும் கல்வி அமைச்சர் இது பற்றியும் கவனம் செலுத்துவாரென்றே நம்புவோம்.

— ஊர்சுற்றி

### யாருடையது?

ஜப்னா எலெக்ரிக்கல்ஸ் உரிமையாளர் ஸ்டான்லி வீதியில் ஒரு திறப்புக் கோர்வையைக் கண்டெடுத்துள்ளார் உரியவர் தகுந்த அத்தாட்சிகாட்டி 'ஈழநாடு' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வாதுவ, திங்கள்

இருபது வயது மதிப்பிடத்தக்க இளம் பெண்ணின் சடலம் ஒன்று அடையாளம் காணப்படும்பொருட்டு ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வாதுவ பொலிஸ் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இச்சடலத்தின் உயரம் 5 அடி 4 அங்குலமென்றும், நீண்ட கூந்தலுடையவர் இந்தப் பெண் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka